

ශීර්ෂ අංක 04 - කාර්ය සාධන වාර්තාව 2022

උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු

செலவுத்தலைப்பு இல.04 - செயலாற்றுகை அறிக்கை 2022

உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

PERFORMANCE REPORT 2022 - HEAD 04

JUDGES OF THE SUPERIOR COURT

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் - செலவினத் தலைப்பு இல. 04

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவள விவரம்

அத்தியாயம் -7 - இணக்க அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.a உயர் நீதிமன்றம்

1. a1 அறிமுகம்

இலங்கை நீதிமன்ற முறைமையிலுள்ள உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகும். இது பிரதம நீதியரசர் மற்றும் 16 உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்டதாகும். இவர்கள் அனைவரும் அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். ஏனைய சகல நீதிமன்றங்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாவதுடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் தத்துவம் செயற்படுத்தப்படுகின்றது.

1. a2 நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுத்திட்டம் (சட்டம், நம்பிக்கை, ஏனையவை)

இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVI மேனிலை நீதிமன்றங்கள் என்ற அத்தியாயத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தின் பொது நியாயாதிக்கம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் அரசியலமைப்பு சார்ந்த நியாயாதிக்கம் 118 முதல் 136 வரையான உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

20 ஆம் திருத்தத்தினால் மேலே குறிப்பிட்ட யாப்பின் 119 ஆம் உறுப்புரை திருத்தப்பட்டு உயர் நீதிமன்றமானது பிரதம நீதியரசர் மற்றும் 06 க்கு குறையாத 16 க்கு மேற்படாத நீதியரசர்களைக் கொண்டிருக்குமென திருத்தப்பட்டது.

1. a3 நிறுவனத்தின் குறிக்கோள்

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப நீதித்துறையின் வினைத்திறன்மிக்க நிருவாகம்

1. a4 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

“அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்தி வினைத்திறனுடன் நீதி நிருவாக செயற்பாட்டை செயற்படுத்தி இலங்கை மக்களின் நம்பிக்கையை பாதுகாத்தலும் அதனூடாக மக்களை மேம்படுத்தலும்”

மிகவும் குறுகிய காலத்தினுள் நியதிச்சட்டத் தத்துவங்களை நடைமுறைப்படுத்தி நீதியை நிருவகித்தல்.

அரசியலமைப்பினால் உயர்நீதிமன்றத்துக்கு பின்வரும் தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கம்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கம்.

- ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு தொடர்பான நியாயாதிக்கம்.
- ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கம்.
- பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் உரித்தாக்கப்படுகின்ற நியாயாதிக்கம்.

1. a5 பிரதான செயற்பாடுகள்

- அரசியல் யாப்பு செயற்பாடு தொடர்பான நீதிமன்ற நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- தேர்தல் ஆட்சேபனை மனு (ஜனாதிபதி தேர்தல்) தொடர்பான நியாயாதிக்கத்தையும், ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கத்தையும் நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் உரித்தாக்கும் அல்லது ஆணையிட்டளிக்கும் அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தரணிகளை சேர்த்துக்கொள்ளுதல், இடைநிறுத்துதல் மற்றும் நீக்குதல்.

இச்செலவுத் தலைப்பின் கீழ் உயர் நீதிமன்ற கௌரவ நீதியரசர்களின் சம்பளம் மற்றும் வேதனங்கள், ஏனைய மீண்டெழும் செலவினங்கள், மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு மற்றும் வெளிநாட்டு மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு என்பன உள்ளடங்குகின்றன.

1. **a 6 நிறுவன வரைபடம் - உயர் நீதிமன்றம்**

பொருந்துவதில்லை.

1.a 7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்றிட்டங்களின் விபரங்கள்.

ஒன்றுமில்லை.

1.b மேன்முறையீட்டு நீதிமன்றம்

1.b.1 அறிமுகம்

அரசியலமைப்பின் 137 ஆவது உறுப்புரையின் மூலம் நிறுவப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றமானது இலங்கை நீதிமன்ற முறைமையில் இரண்டாவது மேன்நிலை நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் நீதிமன்ற முறைமையாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் தலைமையில் 20 கௌரவ நீதிபதிகளை கொண்டுள்ளது.

ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால், நியாயசபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்டதான நிகழ்வுப் பிழைகள் அல்லது சட்டப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்துவதற்கான மேன்முறையீட்டு நியாயதிக்கத்தையும் எழுத்தாணை மற்றும் தடையீட்டெழுத்தாணை என்பவற்றை பிறப்பிக்கும் தத்துவத்தையும் பாராளுமன்றத் தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் தத்துவத்தையும் முதநிலை நீதிமன்றங்களின் வழக்குப்பதிவேடுகளை பரிசோதனையிடும் தத்துத்தையும் கட்டுக்காவலிலுள்ளவர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவருவதற்கும் விட்டுவிடுவதற்குமான அதிகாரத்தையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக நடைமுறைப்படுத்துதல்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் சாதாரணமாக அதன் நியாயாதிக்கத்தை கொழும்பிலேயே பிரயோகிக்குமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு நீதிபதிகளின் ஏகமானதான முடிவொன்றாக இல்லாதிருப்பின் அது வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுள் பெரும்பான்மையோரின் முடிவாக இருக்கும்.

மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகம் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயருடைய அலுவலரொருவரின் பொறுப்பில் இருப்பதுடன், அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் கண்காணிப்புக்கும் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ்பட்டவர்.

1. b 2 நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுத்திட்டம் (சட்டம், நம்பிக்கை, ஏனையன)

1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVI மேனிலை நீதிமன்றங்கள் என்ற அத்தியாயத்தின் 137 ஆம் உறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றம் விபரிக்கப்பட்டுள்ளதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் 138 ஆம் உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 139 முதல் 147 வரையான உறுப்புரைகளில் அதன் தொழிற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட அரசியலமைப்பின 20 ஆம் திருத்தத்தின் பிரகாரம் 137 ஆம் உறுப்புரை மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரையும் ஆறு பேருக்குக் குறையாத பத்தொன்பது பேருக்கு அதிகமாகாத வேறு நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் எனத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.b. 3 நிறுவனத்தின் குறிக்கோள்

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப நீதித்துறையின் வினைத்திறன்மிக்க நிருவாகம்

1. b 4 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

"அடுத்த புதிய தசாப்தத்தில் நீதி நிருவாக செயற்பாட்டை வினைத்திறனுடன் நிறைவேற்றுதல்".

கணிணி தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி வழக்காடிகளுக்கு சிறந்த வசதிவாய்ப்புக்களை வழங்கும் விதத்தில் வினைத்திறனுடன் நீதி நிருவாகத்தை பிரயோகித்தல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினூடாக நிறுவப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றமானது முதனிலை நீதிமன்றங்கள், தொழிலாளர் நியாயசபைகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட சபைகளின் தீர்ப்புக்கள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீள்நோக்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது. மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எழுத்தாணை தொடர்பான நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நியாயாதிக்கமும் உள்ளது. அத்துடன், 2002 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைகளின் போது பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போது பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் சட்டங்கள் முதலியவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேவையான கட்டளைகளையும் சட்ட ஒழுங்குகளையும் வழங்குதல், மற்றும் ஏதேனுமொரு முதனிலை நீதிமன்றத்தின் அல்லது தொழிலாளர் நியாய சபைகளின் அல்லது ஏனைய நிறுவனமொன்றின் வழக்குப் பதிவேடுகளை சோதனையிடவும் அல்லது பரீட்சிப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தத்துவமும் அதிகாரமும் உண்டு.

1. b5 பிரதான செயற்பாடுகள்

- மேல் நீதிமன்றம் உட்பட முதனிலை நீதிமன்றங்களின் தீர்வுகளுக்கெதிரான முன்முறையீடுகளையும் மீள்நோக்கலையும் விசாரணை செய்தல்.
- ஏனைய நியதிச்சட்ட சபைகளுக்கெதிரான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்.
- முதனிலை நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளை அந்நீதிமன்ற தத்துவமுள்ள நீதிமன்றமொன்றுக்கு மாற்றுவதற்கான விண்ணப்பத்தை பரிசீலித்தல்.
- நீதிமன்றத்தை அவமதித்ததல் தொடர்பாக விசாரணை செய்தல்.
- தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

1. **b 6 நிறுவன வரைபடம்**

பொருந்துவதில்லை.

1.b 7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்றிட்டங்களின் விபரங்கள். (ஏதேனுமிருப்பின்)

ஒன்றுமில்லை.

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.a உயர் நீதிமன்றம்

கிடைக்கத்தக்க மனிதவள மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தும் நீதி நிருவாகத்தினை செயற்படுத்தியும் பொது மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் உயர்நீதிமன்றத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை அதிகபட்சளவில் நிறைவேற்றுதல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தின் 2022.01.01 முதல் 2022.12.31 வரையிலான செயலாற்றுகை

வழக்குகளின் தன்மை	2022/01/01 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை	2022/01/01 முதல் 2022/12/31 வரை தாக்கல் செய்த வழக்குகளின் எண்ணிக்கை	2022/01/01 முதல் 2022/12/31 வரை தீர்க்கப்பட வேண்டிய மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	2022/01/01 முதல் 2022/12/31 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2022/12/31 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
அடிப்படை உரிமைகள் தொடர்பான விண்ணப்பங்கள்	1390	399	1789	369	1420
விஷேட மேன்முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள்	600	390	990	224	766
பாராளுமன்ற சட்ட மூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றக் கட்டளைகள்	0	68	68	61	7
மேன்முறையீட்டு வழக்குகள்	1210	155	1365	118	1247
வணிக மேல் நீதிமன்ற மேன் முறையீட்டு வழக்குகள்	460	68	528	45	483
மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள்	190	138	328	80	248
எழுத்தாணை விண்ணப்பம்	15	8	23	5	18
மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு வழக்குகள்	1108	409	1517	284	1233
மீள்நோக்கு வழக்குகள்	4	3	7	3	4
அரசியலமைப்பின் பொருட் கோடல்கள் தொடர்பான வழக்குகள்	0	0	0	0	0
நானாவித வழக்குகள்	15	4	19	2	17
நீதாய நீதிமன்றத் தீர்ப்பு மேன்முறையீடுகள்	3	0	0	0	3
சட்ட விதி வழக்குகள்	16	10	26	4	22
நீதிமன்றத்தை அவமதித்தல் வழக்குகள்	7	2	9	1	8
சட்டத்தரணிகளை நீக்கும் வழக்குகள்	2	3	5	0	5
துரிதப்படுத்தல் வழக்குகள்	1	0	1	0	1
மொத்தம்	**5021**	**1657**	**6678**	**1196**	**5482**

பதிவாளர் - உயர் நீதிமன்றம்

2.b மேன்முறையீட்டு நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றம் 3 பதிவறைகளை நிர்வகிக்கின்றது. அங்கு விசாரிக்க வேண்டியுள்ள மற்றும் விசாரணைகள் முடிவடைந்துள்ள வழக்கு வகைகள் உள்ளடங்கிய பெரியதொரு தரவுத்தளம் உள்ளது.அப்பதிவறைகளில் புதியதொரு முறைமைக்கேற்ப வழக்கு அறிக்கைகளை களஞ்சியப்படுத்தவும் வழக்கிலங்களை அடையாளக் குறியிடவும் (Barcode) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்விதத்தில் ஒவ்வொரு வழக்கு வகைக்கேற்ப வழக்குகளை களஞ்சியப்படுத்தி தேவைப்படும் போது அவற்றை பரீட்சிக்க இலகுவானதொரு முறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது வரிக்குறியீட்டு இலக்கமிடல் முறை மூலம் வழக்கு முகாமைத்துவ முறைமையுடன் (Case Management system) தொடர்புபடுகின்றது.

வழக்குக் கட்டணம், பிரதிபண்ணற் கட்டணம் போன்ற நிர்வாக ரீதியான கட்டணங்களை அறவிடும் போது கணிணிமயப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களை வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உரிய கணக்கறிக்கைகளை கணிணி முறைமையைப் பயன்படுத்தி தன்னியக்க உருவாக்கம் மூலம் தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பட்டியலிடல் பிரிவு வழக்கு முகாமைத்துவ முறைமை மூலம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, மிகச்சரியாகவும் வினைத்திறனுடனும் வழக்குகளைப் பட்டியலிடுதல், வலைத்தளத்தை நிர்வகித்தல், வழக்காடிகளின் அறிவுறுத்தலுக்காக கூப்பிடும் வழக்குகள் தொடர்பான விபரங்களை நாளாந்தம் இற்றைப்படுத்தி காட்சிப்படுத்ததுல் ஆகிய பணிகள் இடம்பெறுகின்றன.

பட்டியலிடும் பிரிவும், பதிவாளர் மற்றும் பிரதிப் பதிவாளர்களும் அனைத்து பதிவறைகளுடன் வழக்கு முகாமைத்துவ முறைமையின் மூலம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அதனூடாக, உரிய உத்தியோகத்தருக்கு ஏதேனும் ஒரு வழக்கறிக்கையின் விபரத்தை பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனை சட்டத்தரணிகள் மற்றும் வழக்காடிகள் பரிசீலிக்கும் விதத்தில் வியாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிகவும் வினைதிறன்மிக்க பயனுறுதிவாய்ந்த மக்கள் சேவையை உறுதிப்படுத்துவதற்காக மேன்முறையீட்டின் வழக்குக்கோவைகளை இலத்திரனியல் வடிவமைப்பு(e-format)க்கு மாற்றுவதற்கும் இலத்திரனியல் ஆவணப்படுத்தல் முறை மூலம் அதனை நிர்வகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தை நவீனமயப்படுத்தி கையடக்கத் தொலைபேசிச் செயலியை (Mobile Application) அறிமுகப்படுத்தி வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை செயல்திறனுடன் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேன்முறையீட்டு அலுவலகம், நீதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் திறந்த நீதிமன்றங்கள் ஆகிய அனைத்தையும் கணிணி வலைப்பின்னலுக்குள் உட்படுத்தி கடதாசி ஆவணங்களின் சுற்றோட்டத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்
2022.01.01 முதல் 2022.12.31 வரையிலான செயலாற்றுகை

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 2022.01.01 முதல் 2022.12.31 வரையிலான செயலாற்றுகை					
	வழக்கு வகை	**2022/01/01 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை**	**2022/01/01 முதல் 2022/12/31 வரை பதிவாகிய வழக்குகளின் எண்ணிக்கை**	**2022/01/01 முதல் 2022/12/31 வரை தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**	**2023/01/01 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை**
01	எழுத்தாணை விண்ணப்பங்கள்	1362	502	473	1391
02	மேல் நீதிமன்ற – குற்றவியல் வழக்குகள்	856	46	125	777
03	கடலாண்மை வழக்குகள்	05	-	04	01
04	பிறநாட்டிடம் ஒப்படைத்தல்	01	-	01	-
05	மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடு	646	48	72	622
06	சிவில் மேன்முறையீடுகள்	43	-	29	14
07	மேல் நீதிமன்ற மீள்நோக்கு விண்ணப்பங்கள்	222	168	200	190
08	மீளாய்வு வழக்குகள்	15	01	11	05
09	மேன்முறையீட்டுக்கான அனுமதி	32	09	20	21
10	வரி மேன்முறையீடுகள்	193	54	65	182
11	மேல் நீதிமன்ற பிணை மேன்முறையீட்டு விண்ணப்பங்கள்	07	01	02	06
12	பிணை விண்ணப்பங்கள்	46	121	87	80
13	வக்பு சபையின் மேன்முறையீடு	05	01	03	03
14	காணி மீளாய்வுச் சபையின் மேன்முறையீடுகள்	07	-	02	05
15	Restitution in Intergrum	52	26	31	47
16	நீதிமன்றத்தை அவமதித்தல் வழக்குகள்	37	16	11	42
17	நீதிமன்றத்தை மாற்றுதல் தொடர்பான வழக்குகள்	09	07	15	01
18	ஆட்கொணர் வழக்குகள்	02	04	03	03
19	தகவல் அறியும் சட்டம்	07	09	01	15
20	தடைக் கட்டளைகள்	01	06	07	-
21	நீதிவான் நீதிமன்ற மீளாய்வுகள்	09	10	04	15
22	நானாவித வழக்குகள்	05	03	05	03
23	நாடு கடத்தல் வழக்குகள்	01	-	01	-
	மொத்தம்	**3563**	**1032**	**1172**	**3423**

பதிவாளர் - **மேன்முறையீட்டு நீதிமன்றம்**

அத்தியாயம் 03 – வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகை

3.1 அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் தரநியமம் இல. 01 இன் மூலம் குறித்துரைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயார்செய்துள்ள நிதிக்கூற்று.

3.2 ஒதுக்கப்பட்ட நிதிப் பயன்பாட்டின் செயலாற்றுகை (ஏதேனுமிருப்பின்)

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை.

நன்கொடைகள் அல்லது ஏனைய வரவுகள் இல்லை

3.4 நிதி அல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை

நிதி அல்லாத சொத்துக்கள் இல்லை.

3.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

3.1 அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் தரநியமம் இல. 01 இன் மூலம் குறித்துரைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயார்செய்துள்ள நிதிக்கூற்று.

ஏசீஎ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

மாதிட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	2021	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஎ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		404,517,000	389,630,500	ஏசீஎ-3
-	வைப்புகள்		-	-	ஏசீஎ-4
-	முற்பணக் கணக்குகள்		437,522	539,924	ஏசீஎ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**404,954,522**	390,170,424	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**404,954,522**	390,170,424	
	திறைசேரிக்கான அனுப்பீடு (உ)		**1,425,420**	20,083,031	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு ஊ = (இ)-(உ)		**403,529,102**	370,087,393	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
300,000,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	295,140,999	293,018,121	
104,300,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	110,250,130	66,443,575	ஏசீஎ-2(ii)
800,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	85,037	182,952	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
405,100,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		**405,476,167**	359,644,649	
	மூலதனம் செலவினம்				
800,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	100,000	-	
2,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	82,920	14,978,868	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஎ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
8,000,000	திறன் விருத்தி	14	4,484,433	1,396,765	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
10,800,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		**4,667,353**	16,375,634	
	வைப்புக் கொடுப்பனவுகள்		-	-	ஏசீஎ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		-	581,000	ஏசீஎ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		-	581,000	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		410,143,520	376,601,283	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(6,614,418)	(6,513,890)	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(6,614,418)	(6,513,890)	ஏசீஎ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஎ-3

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022	2021
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	609,973,733	609,890,813
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	1,584,779	2,022,301
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**611,558,512**	**611,913,114**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		1,584,779	2,022,301
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		609,973,733	609,890,813
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**611,558,512**	**611,913,114**

பக்க இலக்கம் 07 முதல் 24 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 25 முதல் 28 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக விளைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை விளைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 2023/02/22	திகதி : 2023/02/22	திகதி : 2023/02/21
Pradeep Mahamuthugala Additional Magistrate Registrar Supreme Court Colombo - 12, Sri Lanka.	Pradeep Mahamuthugala Additional Magistrate Registrar Supreme Court Colombo - 12, Sri Lanka.	R.A.I.J.RANATUNGA Chief Accountant Supreme Court Colombo - 12.

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

உண்மை

	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	6,614,418	6,410,890
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	404,517,000	389,630,500
முற்பணங்களை அறவிடல்	437,522	436,924
வைப்புக்களின் பெறுகை	-	-
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**411,568,940**	**396,478,314**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	409,875,563	359,461,697
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	85,037	182,952
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	-
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	1,425,420	20,083,031
முற்பணக் கொடுப்பனவு	-	375,000
வைப்புக் கொடுப்பனவு	-	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**411,386,020**	**380,102,680**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**182,920**	**16,375,634**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதிக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	182,920	16,375,634
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**182,920**	**16,375,634**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(182,920)**	**(16,375,634)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**0**	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	

3.2 ஒதுக்கப்பட்ட நிதியை (இருப்பின்) பயன்படுத்திக்கொள்ளும் செயலாற்றுகை

(ரூபாய். 000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட நிதி		உண்மை செலவு	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல்	இறுதி		
உயர் நீதிமன்றம்				
மீண்டெழும்	192650	200626	195972	97.68%
மூலதனம்	5300	5300	2387	45.04%
மேன்முறையீட்டு நீதிமன்றம்				
மீண்டெழும்	212450	212450	209504	98361%
மூலதனம்	5500	5500	2280	41.45%
மொத்த ஒதுக்கீடு				
மீண்டெழும்	405100	413076	405476	98.16%
மூலதனம்	10800	10800	4667	43.21%

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை.

- ஒன்றுமில்லை -

3.4 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை

(ரூபாய். 000)

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 ஆந் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கேற்ப மீதி	31.12.2022 ஆந் திகதிக்கு நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்பட வேண்டியது	முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல்.
9152	இயந்திரம்	609,973	609,973	-	100%

3.5 கணக்காய்வாளரின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

Mu No :- JLO/B/SC/2022/03 திகதி :- 2023 மே 26

பதிவாளர் (கணக்கீட்டு உத்தியோகத்தர்)

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்

செலவினத் தலைப்பு 004 : 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(1) நியதிகளுக்கேற்ப, மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மீதான 2022 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் சாராம்ச அறிக்கை.

குறித்த அறிக்கையும் நிதிக் கூற்றுப் பிரதிகளும் (சிங்களம், ஆங்கிலம், தமிழ்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்
ஆர். எஸ் கடுகம்பல
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்
கணக்காய்வாளருக்காக

பிரதிகள் : பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.

3.5 கணக்காய்வாளரின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

Mu No :- JLO/B/SC/2022/03 திகதி :- 2023 மே 26

பதிவாளர் (கணக்கீட்டு உத்தியோகத்தர்)

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்

செலவினத் தலைப்பு 004 : 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(1) நியதிகளுக்கேற்ப, மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மீதான 2022 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் சாராம்ச அறிக்கை.

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

செலவினத் தலைப்பு 004 - மீயுயயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளின் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற்கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இவ்வறிக்கை 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் உபபிரிவு 11(1) இன் பிரகாரம், மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகளை உள்ளடக்கியுள்ளது. அத்துடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) உடன் இணைத்து வாசிக்கக்கூடிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளை அனுசரித்து தயாரிக்கப்பட்டுள்ள குறித்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் உபபிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் விளைவை தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் தொடர்பில் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு அடிப்படைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழிவுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிவு செய்யப்படும். இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது பொறுப்புக்களை இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின்

பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்பவும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சரியான மற்றும் நியாயமான நிலைமைகளைப் பிரதிபலிக்கின்றவாறு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மேலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை நடாத்தி அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளள வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படுகின்ற போதிய பிறழ்கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வை மேற்கொள்கின்ற போது அவை எப்பொழுதும் போதிய பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தப்படுவதாக உறுதிப்படுத்தப்படமாட்டாது. மோசடி மற்றும் தவறான தனி அல்லது கூட்டான அழுத்தத்தினால் போதிய பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாம் என்பதோடு, அதன் போதிய தன்மையை இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு விற்பன்னர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீதான செல்வாக்கின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கேற்ப, கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் ஐயுறவினை பேணுகின்றேன். என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்துக்கு அடிப்படையொன்றை வழங்குகின்ற போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதிய பிறழ்கூற்றுக்கள் ஏற்படுகின்ற இடர்களை அறிந்து கொள்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக காலோசிதமான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. பிழையாக குறிப்பிடுகின்றதன் காரணமாக ஏற்படுகின்ற போதிய பிறழ்கூற்றுக்களால் ஏற்படுகின்ற விளைவிட மோசடியால் ஏற்படுகின்ற விளைவு அதிகமாக இருப்பது

அது கூட்டுச்சதி, போலியான ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதலால், பிழையாகக் குறிப்பிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை விட்டுவிடுதல் காரணமாகவாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் தொடர்பில் அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்துகின்ற எண்ணத்தில் அல்லாமல் இருந்தாலும் காலோசிதமான உரிய கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் தெளிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல் உட்பட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் அவற்றின் உள்ளடக்கம் என்பவற்றுக்கு காரணமாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் சாதாரண முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு காரணமாக இருந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் உரிய முறையில் மற்றும் சாதாரணமாக உள்ளடங்கியுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்துதல் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் முழுமையான முன்வைத்தல் போற்றப்பட்டது.

எனது கணக்காய்வுக்குள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டாளருக்கு அறியப்படுத்துகின்றேன்.

1.5 ஏனைய சட்ட ரீதியானத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் உபபிரிவு 6(ை)(ஈ) பிரிவினால் வேண்டப்படுவதன் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முந்திய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முந்திய வருடத்துடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 மீண்டெழும் செலவுகள்

புனர்நிர்மாணம் மற்றும் மூலதனச் சொத்துக்களின் மேம்படுத்தலின் கீழ் உருவாக்கப்பட்ட 100,000.00 பெறுமதியான தொகையை காசுப்பாய்ச்சற் கூற்றில் தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் நடவடிக்கைச் செலவினங்களின் கீழ் குறிப்பிடுவதற்குப் பதிலாக நிர்மாணிப்புக்கள் மற்றும் கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு பொருள் பெறுகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் நடவடிக்கைச் செலவினங்களின் பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது.

1.6.2 மூலதனச் செலவினங்கள்

காசுப் பாய்ச்சற் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் செலவினத்தின் கீழ் வரும் பௌதீக ஆதனம், நிர்மாணிப்பு மற்றும் கொள்வனவு மற்றும் வேறு முதலீடு, கையகப்படுத்தல் பெறுமதி ரூபா. 82,920 ஆக இருந்ததோடு அது ரூபா. 182,920 என ரூபா. 100,000 மிகைத்துக் காட்டப்பட்டுள்ளது.

1.6.3 பணிமுற்பணக் கணக்கிணக்கக் கூற்றின் நிலுவை

2022 டிசம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 7.5 ஆம் பந்திக்கு அமைவாக, 2022 டிசம்பர் 13 ஆம் திகதிக்கு நிதிச் செயலாற்று அறிக்கையின் நிலுவையானது பணிமுற்பணக் கணக்கிணக்கக் கூற்றின் நிலுவை மற்றும் வருடத்தின் இறுதியில் பணிமுற்பண நிலுவையும் சமமாக இருக்க வேண்டுமென்றிருந்தாலும் நிதிச்செயலாற்றுகையில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா. 1,425,420 பெறுதியான பணிமுற்பண நிலுவை காட்டப்பட்டிருந்தது.

1.6.4 பணிமுற்பண நிலுவை

2022 டிசம்பர் 31 ஆம் திகதிய ஏசீஏ-3 இன் திறைசேரி பதிவேடுகளில் பணிமுற்பண நிலுவையாக ரூபா. 1,425,420 காட்டப்பட்டிருந்ததுடன், நிதி நிலைமைக் கூற்றில் அது தங்கியுள்ள பணமாக நிதிச் சொத்துக்களின் கீழும் பணிமுற்பண நிலுமையாக நடைமுறைப் பொறுப்பக்களின் கீழேயும் காட்டப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

(அ) மீண்டெழும் செலவினத் தலைப்புக்கள் 02 மற்றும் மூலதனச் செலவினத் தலைப்புக்கள் 04 க்கான ரூபா. 2,400,000 பெறுதிமதியான மொத்த ஒதுக்கம் எஞ்சியிருந்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத் தலைப்புக்கள் 08 மற்றும் மூலதனச் செலவினத் தலைப்புக்கள் 05 க்கான ரூபா. 14,990,000 பெறுதிமதியான ஒதுக்கீட்டிலிருந்து ரூபா.7,695,383 பெறுமதியான ஒதுக்கீடு எஞ்சியிருந்ததுடன், அவ்வாறு எஞ்சியிருந்த தொகை 38% முதல் 99% க்கு இடைப்பட்டதாக இருந்தது.

(இ) 004-1-1-1301 மீண்டெழும் செலவினத் தலைப்பின் கீழ் குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து ரூபா. 7,976,000 பெறுமதியான தொகை பெறப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் இல. 66 மூலம் மேலும் ரூபா. 410,000 மாற்றல் செய்யப்பட்டிருந்ததலும், அவற்றில் ரூபா. 367,420 ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. அவ்வாறு எஞ்சியிருந்த தொகையானது மொத்த மாற்றல் பெறுமதியின் 90 சதவீதமாக இருந்தது.

(உ) 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபத்தின் 03(XVII) பந்திக்கு அமைவாக குறிப்பிட்ட ஒரு வருடத்தில் செலவு செய்வதற்கென ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து செலவு செய்யாது எஞ்சியிருக்கும் ஒதுக்கீடுகளை அவ் வருடம் நிறைவடைவதற்கு முன்பு வேறு செலவுகளுக்கு பயன்படுத்தக்கூடாதென்றிருந்தாலும், 06 செலவினத் தலைப்புக்கள் தொடர்பாக ரூபா. 6,260,000 பெறுமதியான நிதி ஒதுக்கீடு நிதி ஒழுங்குவிதிகளின் 66 ஆம் உறுப்புரைக்கு அமைவாக வேறு செலவினத் தலைப்புக்களுக்காக மாற்றல் செய்யப்பட்டிருந்தது.

2.2 பொறுப்புக்கள் மற்றும் பிணிப்புக்களுக்கு அணுகுதல்

(அ) நிதி நிலைமைக் கூற்றில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பிணிப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று (இணைப்பு iii) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்தக் கூற்றில் உள்ளடக்க வேண்டிய பொறுப்புக்களை பொறுப்புக்கள் கூற்று (i) மற்றும் நிதிப் பிரமாணம் 94 (2) மற்றும் (3) க்கு ஏற்ப ஏற்பட்ட பிணிப்புக்களின் கூற்றில் (இணைப்பு iii) குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) SA 92 ஆம் இலக்க திரண்ட பொறுப்புக்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த ரூபா.479,871 பெறுமதியான பொறுப்புக்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்குரிய பிணைப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றிலும் பொறுப்புக்கள் ஏட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2023 ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்குரிய ரூபா. 91,000 பெறுமதியான பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் பிணைப்புக்கள் கூற்றிலும் மற்றும் பொறுப்புக்கள் ஏட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வழங்கவேண்டிய சான்றிதழ்

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்தல்களை வழங்கவேண்டியிருந்தாலும், அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வினைத்திறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறையைத் தயார்செய்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் வினைத்திறன் பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து அதற்கேற்ப குறித்த முறைமை பயனுறுவாய்ந்த விதத்தில் நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்றும் அந்த மீளாய்வுகளை எழுத்துமூலம் செய்து அதன் ஒரு பிரதியை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தாலும் அவ்வாறானதொரு மீளாய்வு நடாத்தியது தொடர்பான கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய காலவரையறைக்குள் தயார்செய்வதை உறுதிப்படுத்துவது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருப்பதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்விடப்படுகின்ற நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாக வகைகூறுவது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்தாலும், அறிக்கையின் 3.1.2 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்பு காரணமான அத்தேவை பூர்த்திசெய்யப்படவில்லை.

2.4 சட்டங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எஎன்பவற்றிற்கு இணங்காமை

சட்டங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அவதானம் செலுத்துதல்	இணங்காமை
(அ) 1982 ஆம் அண்டு 43 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டத்தின்	34 தடவைகளில் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா. 6,389,842 ஆக இருந்ததுடன், ரூபா. 25,000 மேற்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இணங்கியொழுகாமை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் i. நிதிப் பிரமாண இலக்கம் 1645 (அ)	• 11 வாகன விபத்துக்கள் தொடர்பில் லொக் குறிப்புக்களில் குறிப்பிடப்படவில்லை.

	• குறித்த 11 வாகன விபத்துக்கள் தொடர்பில் போக்குவரத்து தொடர்பான சரார்ம்ச அறிக்கை மற்றும் வருடாந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் லொக் ஏடுகளில் குறிப்பிடப்படவில்லை.
(இ) 2006 ஜூலை 14 ஆம் திகதிய 2006 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 03 (VI) ஆம் பந்தி.	உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 25 வாகனங்கள் தொடர்பில் சுற்றுநிருபத்தின் 02 ஆம் இணைப்பில் குறிப்பிட்டுள்ள அறிக்கையை மாதாந்தம் தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) 2016 டிசம்பர் 31 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	12 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை நடத்தப்பட்டிருக்கவில்லை.

2.5 தேவை நிமித்த உப பணிமுற்பணம்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 98-11 (இ) பந்திக்கு அமைவாக தேவை நிமித்த உப பணிமுற்பணம் வழங்கிய பிறகு குறித்த பணி முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்தத் தேவை நிமித்த உப பணி முற்பணத்தை தீர்ப்பனவு செய்ய வேண்டியிருந்தாலும் ரூபா. 2,484,923 பெறுமதியான 08 காலதாமதங்கள் பதிவாகியுள்ளன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 திட்டமிடுதல்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்திக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக அடுத்த வருடத்திற்கான வருடாந்த செயல்திட்டத்தினைத் தயார்செய்து நடப்பாண்டின் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தாலும் அது 2022 ஜனவரி 27 ஆம் திகதியிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஏப்ரல் 28 ஆம் திகதியே கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த நடைமுறைத் திட்டத்தினைத் தயார்செய்வது தொடர்பான வழிகாட்டற் கோவையின் இலக்கம் 12 க்கு அமைவாக வருடாந்த நடைமுறைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டியிருக்கும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3.1.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 12.1 பந்திக்கு அமைவாக வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல முன்பும், 2022 மே மாதம் 26 ஆம் திகதிய PFD/RED/REG/02/CC/2022 இலக்க நிதி அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கு முன்பும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தால் குறித்த அறிக்கைகளை

சமர்ப்பிப்பதற்காக 2022 ஜூன் 30 வரை காலக்கெடு வழங்கப்பட்டிருந்தாலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2022 நவம்பர் 02 ஆம் திகதியிலேயே பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 10.2 பந்திக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (2) உறுப்புரைக்கு அமைவாக வருடாந்த நிதிநிலைமைக் கூற்றுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023 மார்ச் மாதம் 20 ஆம் திகதியே சமரப்பிக்கப்பட்டிருந்தது.

3.2 பெறுகைகள்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்திக்கு அமைவாக வருடாந்த பெறுகைத் திட்டத்தினை நடப்பாண்டின் டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்பு தயாரித்து கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும் 2022 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் 2023 ஏப்ரல் 28 ஆம் திகதியிலேயே முன்வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டற்கோவையின் 4.2.1 (இ) பந்தியின் பிரகாரமும் மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் 13 ஆவது வழிகாட்டல் பிரகாரமும் அடுத்த வருடத்திற்கான பெறுகை நடவடிக்கைகளை முழு விபரங்களுடன் காண்பிக்கும் பெறுகைத் திட்டம் தயார்செய்யப்படவில்லை.

3.3 சொத்துக்களை முகாமை செய்தல்

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 11.1 ஆம் பந்தி மற்றும் நிதிப் பிரமாணம் இலக்கம் 756(6) க்கு அமைவாக வருடாந்த இருப்புப் பொருட் பட்டியல் பற்றிய வருடாந்த சுற்றாய்வு கால வரையறை குறிப்பிடப்பட்டிருந்தாலும் திணைக்களத்தினால் வருடாந்த இருப்புப் பொருட் பட்டியல் வருடாந்த சுற்றாய்வு குறித்த காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. நிலைபேறான அபிவிருத்தி

2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய எம்.எஸ்.டீ.டப்/08/65 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சினால் வெளியிட்டுள்ள கடிதத்திற்கு அமைவாக திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அவ்விலக்குகளை அடைந்துகொள்வதை இணைப்புச் செய்வதற்காக உத்தியோகத்தர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி வேலைத்திட்டம் தயார்செய்திருக்கவில்லை.

5. நல்லாட்சி

5.1 பொது மக்களுக்கு சேவையாற்றுதல்

2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பதற்கு மீதியாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 6678 ஆக இருந்தாலும், அந்தக் காலத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1196 ஆக இருந்ததன் காணரமாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இன்னும் தீர்க்கப்படவிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 5482 என அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயின், வருடத்தின் ஆரம்பத்தில் தீர்ப்பதற்கு இருந்த வழக்குகளுடன் ஒப்பிடுகையில் தீர்த்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை 18 சதவீதம் என்ற மிகவும் குறைவான சதவீதமாகும்.

2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தீர்ப்பதற்கு மீதியாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 4595 ஆக இருந்தாலும், அந்தக் காலத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1172 ஆக இருந்ததன் காணரமாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இன்னும் தீர்க்கப்படவிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 3423 என அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயின், வருடத்தின் ஆரம்பத்தில் தீர்ப்பதற்கு இருந்த வழக்குகளுடன் ஒப்பிடுகையில் தீர்த்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை 26 சதவீதம் என்ற மிகவும் குறைவான சதவீதமாகும்.

5.2 உள்ளகக் கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசி கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) அம் பிரிவிற்கு ஏற்ப திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றினை அமைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரையும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. நீதி அமைச்சினால் 2022 வருடத்திற்கான உள்ளகக் கணக்காய்வு செய்யப்பட்டிருந்தாலும் உள்ளகக் கணக்காய்வுக் கிளையினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்

ஆர்.எஸ் கடுகம்பல

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் அதிபதிக்காக.

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படையில்)

பொருத்தமற்றது.

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடவும்

பொருத்தமற்றது

அத்தியாயம் - 06 - மனிதவள முகாமைத்துவ விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம் (மிகை)
சிரேஷ்ட			
உயர் நீதிமன்றம்	17	17	-
மேன்முறையீட்டு நீதிமன்றம்	20	20	-

6.2 ** மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றதென சுருக்கமாக குறிப்பிடவும்.

பொருத்தமற்றது.

6.3 மனித வள விருத்தி

பொருத்தமற்றது.

அத்தியாயம் - 07 இணக்கப்பாட்டு அறிக்கை

	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதெனின் அதனை சுருக்கமாக விபரிக்குக	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை.
1	**கீழே குறிப்பிடுகின்ற நிதிக்கூற்றுகள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கை.	இணக்கமானது		
1.2	வேறு			பொருத்தமற்றது
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பேணல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்து பேணிவரல்.	இணக்கமானது.		
2.2	தனிநபர் வேதனாதி பதிவுகள்/ தனிநபர் வேதனாதி அட்டைகளை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கையை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்	இணக்கமானது.		
2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிவரல்	இணக்கமானது.		
2.8	இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.9	இழப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.10	பொறுப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GAN20) பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		

03	**நிதிக்கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்காக அதிகாரமளித்தல். (நி.பி 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்துக்குள் பகிரப்பட்டுள்ளன.	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்களை அதிகாரமளிப்பது தொடர்பாக நிறுவனத்துக்குள் அறிவுறுத்துதல்.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கும் விதத்தில் அதிகாரமளித்தல்.	இணக்கமானது		
3.4	171/2004 ஆம் இலக்க 2014.05.11 ஆந் திகதிய அரச கணக்கீட்டு சுற்றுநிருபத்துக்கேற்ப அரச சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதி பயன்பாட்டின் போது கட்டுப்பாடுகள் கணக்காளர்களினால் கடைபிடிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
4	**வருடாந்தத் திட்டத்தை தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயல்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தை தயாரித்தல்.	இணக்கமானது		
4.3	மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்துக்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத்திட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொளள்ளல்.			பொருத்தமற்றது
4.4	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது		
4.5	வருடாந்த மதிப்பீட்டைத் தயார்செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்துக்கு உரிய திகதிக்கே முன்வைத்தல்.	இணக்கமானது		

4.6	வருடாந்த நிதிப்பாய்ச்சல் கூற்றை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.			
4.7	காலாண்டு அறிக்கைகளை உரிய திகதிக்கே திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.			
5.	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் விதந்துரைத்துள்ள திகதியில் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் வழங்கபட்டுள்ளது.	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி. பி 134(2) DMA/1-2019 க்கு இணங்க வருடத்தின் ஆரம்பத்திலேயே கணக்காய்வாளர் நயாகத்துடன் கலந்துரையாடிய பிறகு உள்ளகக் கணக்காய்வு திட்டத்தைத் தயார்செய்தல்.			பொருத்தமற்றது
6.2	சகல கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்தல்.			பொருத்தமற்றது
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப உறுப்புரையின் படி அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.			பொருத்தமற்றது
6.4	நி.பி 134(3) இன் படி, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			பொருத்தமற்றது
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 1-2019 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு இணங்க குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்			பொருத்தமற்றது

	குழுக்களை குறித்த வருடத்தினுள் நடத்தியிருத்தல்.			
8	**ஆதன முகமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவச் சுற்றுநிருபத்தின் 07 வது அத்தியாயத்துக்கு அமைவாக ஆதனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்றுத் தீர்த்தல் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 13 ஆவது உறுப்புரைக்கு அமைவாக அச்சுற்றுநிருபத்தின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தவும் இணைப்புச் செய்வதற்கும் பொருத்தமான ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அவர் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு அறிக்கைப்படுத்தியிருத்தல்.	இணக்கமானது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்துக்கு அமைவாக பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி குறித்த அறிக்கையை குறித்த திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் நிறைவேற்றியிருத்தல்.	இணக்கமானது		
8.5	நி.பி 772 க்கேற்ப பாவனைக்குதவாத பொருட்களை அகற்றியிருத்தல்.	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்.**			

9.1	ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்தல்.			பொருத்தமற்றது
9.2	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு ஆறு மாதத்துக்கும் குறைவான காலத்தினுள் விற்றொழித்திருத்தல்.	இணக்கமானது		
9.3	வாகன லொக் குறிப்பு புத்தகம் இற்றைப்படுத்தி பேணுதல்.			பொருத்தமற்றது.
9.4	அனைத்து வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி 103, 104, 109 மற்றும் 110 க்கேற்ப செயற்படுதல்.	இணக்கமானது		
9.5	2016/30 ஆம் இலக்க 2016.12.29 ஆந் திகதியுடைய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் 3.1 உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்க வாகனங்களின எரிபொருட் பாவனையை பரிசீலனை செய்தல்.			பொருத்தமற்றது.
9.6	குத்தகை காலத்தின் பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகங்களை முழுமையாக மாற்றுதல்.			பொருத்தமற்றது.
10	**வங்கிக்கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்றை தயார்செய்து சான்றுபடுத்தி அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
10.2	மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்திலோ அல்லது அதற்கு முன்னருள்ள வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்ட செயலற்ற			பொருத்தமற்றது

	வங்கிக் கணக்குகளை தீர்த்துவைத்தல்.			
10.3	வங்கிக்கணக்கிணக்க கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்ய வேண்டிய நிலுவைகள் தொடர்பாக நிதி விதிமுறைகளுக்கேற்ப செயற்பட்டு ஒரு மாத காலத்தினுள் அந்நிலுவையை தீர்த்தல்.	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**			
11.1	ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் வரையறைகளை மீறாது செலவுகளை மேற்கொள்ளல்.	இணக்கமானது		
11.2	நி. பி 94(1) இற்கேற்ப ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து செலவு செய்ததன் பின்னர் வருட இறுதியில் நிலுவையிலுள்ள நிதி ஒதுக்கீடுகளின் வரையறையை மீறாத பொறுப்புக்கள்.	இணக்கமானது		
12.	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்.	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவைகள் தொடர்பாக கால பகுப்பாய்வினை நடத்தியிருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலதிகமான கடன் நிலுவைகளை தீர்ப்பனவு செய்தல்.	இணக்கமானது.		
13.	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுதல் தொடர்பாக நி.பி 571 க்கு இணங்க நடவடிக்கை எடுத்திருத்தல்.			பொருத்தமற்றது
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை இற்றைப்படுத்தி பேணிவரல்.			பொருத்தமற்றது
14	**பணி முற்பணக்கணக்கு**			

14.1	மீளாய்வு வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியானது திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
14.2	நி.பி 371 க்கேற்ப வழங்கப்பட்ட தேவை நிமித்த உப-பணி முற்பணமானது குறித்த செயற்பாடு முடிவடைந்து ஒரு மாதகாலத்தினுள் தீர்க்கப்பட்டது.	இணக்கமானது		
14.3	நி.பி 371 க்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சாதவாறு தேவை நிமித்த பணி முற்பணம் வழங்கபட்டிருத்தல்.	இணக்கமானது		
14.4	பணி முற்பண கணக்கின் மீதியை திறைசேரியின் புத்தகத்துடன் மாதாந்தம் ஒப்புநோக்கல்.	இணக்கமானது.		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிமுறைகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானங்களிலிருந்து மீளசெலுத்தப்பட வேண்டியவை செலுத்தப்பட்டன.			பொருத்தமற்றது.
15.2	திரட்டியிருந்த வருமானத்தை வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமானத்துக்கு வரவு வைத்தல்.			பொருத்தமற்றது.
15.3	நிபி. 176 க்கு அமைவாக வருமான நிலுவை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.			பொருத்தமற்றது.
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எல்லைக்குள் ஆளணியை நிர்வகிகத்தல்.			பொருத்தமற்றது.
16.2	அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருத்தல்.			பொருத்தமற்றது.
16.3	20.09.2017 ஆந் திகதியுடைய 04/2017 ஆம் இலக்க எம்.எஸ்.டீ			பொருத்தமற்றது.

	சுற்றுநிருபத்துக்கமைவாக அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்.**			
17.1	தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு சிறந்த தகவல் பதிவேடு நிர்வகிக்கப்படுவதுடன் அது தகவலறியும் உரிமை மற்றும் விதிமுறைகளுக்கிணங்க இற்றைப்படுத்தப்படுகின்றது.	இணக்கமானது.		பொருத்தமற்றது.
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் வலைத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன் வலைத்தளத்தினூடாகவோ அல்லது மாற்று வழிகளினூடாகவோ நிறுவனம் தொடர்பான மக்களின் பாராட்டுக்கள்/ குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை மேற்கொண்டிருத்தல்.	இணக்கமானது.		பொருத்தமற்றது.
17.3	தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் உறுப்புரைகளுக்கு அமைவாக வருடத்துக்கு இருமுறை அல்லது வருடத்துக்கு ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தில்.	இணக்கமானது.		பொருத்தமற்றது
18	**பிரசைகள் சாசனத்தை அமுல்படுத்துதல்.**			
18.1	பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2008 (1) ஆம் இலக்கங்களுடைய சுற்றுநிருபங்களுக்கமைவாக நிறுவனத்தினால் பிரசைகள் சாசனம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.			பொருத்தமற்றது

18.2	அந்தச் சுற்றுநிருபத்தின் 2.3 பந்திக்கு அமைவாக பிரசைகள் சாசனம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை கண்காணிக்கவும் மதிப்பிடவும் ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.			பொருத்தமற்றது.
19	**மனிதவள திட்டத்தைத் தயாரித்தல்.**			
19.1	2018.01.24 ஆந் திகதியுடைய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02 ஆம் மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மனித வள திட்டமொன்று தயார்செய்துள்ளமை.			பொருத்தமற்றது
19.2	ஆளணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்துக்கு 12 மணித்தியாலங்களுக்கு குறையாத விதத்தில் பயிற்சி வாய்ப்புக்கள் மேற்குறிப்பிட்ட மனிதவள திட்டத்தினுள் உள்ளடக்கியுள்ளமை.			பொருத்தமற்றது
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மொத்த ஆளணியினருக்கும் வருடாந்த செயற்சாதனை உடன்படிக்கை கைசாத்திட்டிருத்தல்.			பொருத்தமற்றது.
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 6.5 பந்திக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயார்செய்தல், இயற்றிறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற பொறுப்புக்களுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருத்தல்.			பொருத்தமற்றது
20	**கணக்காய்வு பதிவுகளுக்கான துலங்கல்**			

20.1	முந்திய வருடத்துக்காக கணக்காய்வாளரால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது.		